மாணவர் விருந்து எண் 3.

971

கற்புடையமகள் சாவித்திரி.

சோழன் கரிகாலன், கன்றுங் கனியுதவும்,

நூலாசிரியரும்,

தஞ்சை, கலியாணசுந்தரம் உயர்தரக் கலாசாலை

தலைமைத் தமிழாசிரியருமாகிய,

L. உலகநாத பிள்ளை,

இயற்றியது.

All Rights Reserved

உ

முகவுரை.

கற்புடைமகளிர் வரலாற்றின் ஒருபகுதியாகிய இந்நூல், தமிழில் உரைநடை எழுத விரும்பும் இளம்பருவத்து ஆண்மகற்கும், பெண்மகட்கும் பயன்படுதல் வேண்டி, எளிய இனிய நடையில் சுருங்க எழுதப்பெற்றது.

இதனைத் தம்போல்வார் படித்தின்புறுதற்பொருட்டு அச்சிட்டுதவிய மாணவர் மாட்சி பாராட்டற்பாலதாகும்.

தஞ்சை,
20-9-1923.

L. உலகநாத பிள்ளை.

சாவித்திரி.

காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையி னிற்கு
மீண்டையுள தெய்வதமு மார்முகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களு மவர்க்குநிக ரன்றே.

உலகத்தில், கற்பின்வழுவாமல் தன்னைக் காத்து, உண்டிமுதலியவற்றால் கணவனைப் பேணுதலைச் செய்து, புகழ் பெருக்கும் தன்மையரே பெண்ணென்று சொல்லப் படுவார். ஒருவன் எய்தும் பொருள்களுள், கற்பென்னும் கலங்கா நிலையமைந்த பெண்டிரைவிட மேம்பட்ட பொருள் இல்லை. அம்மங்கையர் பெய்யென்று சொல்லப் பெருமழை பெய்யும். பட்டவைகளைச் சுட்டெரிக்கும் தீயும் ஏவின செய்தொழுகும்.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பர் அவ்வையார். அது, கணவன் கற்பித்தவாறு நடப்பது என்றவாறும், கண்ணிற்கு ஒளி போலப் பெண்ணிற்கு கற்பு இன்றியமையாதது. கணவன் சொற்கடங்கி நடப்பதே அற

மும் ஆன்ற நோன்புமாதலால், அவர்கள் வேறு அறமும் நோன்பும் புரிவது மிகையாகும். குல மகட்குத் தெய்வம் கொழுநன் ஆதலால், அவன் எத்துணை இழிந்த நிலையிலிருப்பினும் இகழாது அவனையே தெய்வமா நினைந்து அச்சமும் அன்பும் பெருக வழிபடுவர். பிறந்த மரபும் புகுந்த மரபும் அவரால் நன்மையுறும், நங்கையர்க்கு உயிர்தம் கணவராதலால், குளத்தில் நீர்நிறைந்த பொழுது செழித்தும், வற்றிய போது வாடியும் அழியும் கொட்டியும் ஆம்பலும் போலத், தம் கணவர்க்குத் துன்பநேர்ந்தபோது துன்புறுதலும் இன்பம் வந்த காலையில் இன்புறுதலும் அவர்க்கு இயல்பு. இவ்வுண்மை விளங்கக் கற்புடைய நங்கைமாருள் ஒருவராகிய **சாவித்திரி** வரலாற்றினைக் கூறுவாம்.

நீர்சூழ்ந்த நிலவுலகின்கண் பல்வளங் கனிந்த **மத்திரதேசம்** என்றொரு நாடுண்டு. அந்நாட்டை **அசுவபதி** என்னும் மன்னவன் செங்கோல் செலுத்தி வந்தான். அவனுக்குப் பல்வகைச் செல்வங்களிருந்தும் மக்கட் பேறு இல்லாமையால் மனக்கவலை பெரிதாயிற்று. "மக்கட்பேற்றிற்பெறும் பேறில்லை" என்றறிந்த அவ்வேந்தன், அறநூல் வல்லாரோடு ஆராய்ந்தபோது, திருவருளே இத்தகை குறையைத் தீர்க்க

வல்லது ; அதனைப்பெறுதற்குச் சாவித்திரி தேவியை வழிபடுக என்று அவருரைப்பக்கேட்டு, எண்ணிய எண்ணம் எய்தப்பெற்றவனைப்போல் உவப்பெய்தி நல்ல நாளில் தேவி நோன்பு நோற்கத் தொடங்கிப் பதினெட்டு யாண்டளவும் இயற்றிவந்தனன். அப்பொழுது தேவி எதிராக எழுந்தருளி வேந்தே ! நின்செய்கை எமக்குப் பெருமகிழ்வளித்தது நீ யாது வேண்டினை ? எனக்கேட்டருளினள்.

மன்னவன் கைகுவித்து வணங்கி நின்று, எல்லா உலகினையும் ஈன்றளிக்கும் அன்னே ! அருட்டிருமேனிகொண்ட அம்மே ! நின் திருவருளால் பொன்னும் புகழுமுடையேனுய்ப் பல் யாண்டளவும் பாராண்டும் அவற்றாற் பயனொன்றும்எய்திலேன். கண்ணில்லாத யாக்கையும் திங்களில்லாத வானமும், புலவரில்லாத அவைக்களமும் போல் என்மனை பொலிவற்றிருக்கின்றது.

"கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லா லுருக்கி யழுதோடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சிமைந்த
ரில்லா தவர்க்கு மனைவாழ்வி னினிமையென்னும்"

என்கின்றது உலகம். எல்லாம் அறிந்த நீ அறியாத தொன்றில்லை. ஆயினும் நீ கட்டளை

யிட்ட வண்ணம் யான் வேண்டியதனைக் கூறுகின்றேன். பொருட் செல்வம் பலபடைத்தும் மக்கட் செல்வம் ஒன்று இல்லாத பெருங்குறை என் உள்ளத்தை மிகவும் வருத்துகின்றது. இக்குறை தீர அருள்புரிய வேண்டும்'' என்றிரந்தனன்.

கேட்ட தேவி புன்னகையோடு, "மன்னவ! இனி கவலற்க. இப்பிறப்பில் உனக்கு ஆண்மகவு இல்லை. அறிவினும் அழகினும் சிறந்த ஒரு பெண்மகவினை அளிக்கின்றோம். அவளால் உனக்கு எல்லா மேன்மையும் உண்டாகும்'' என்றுரைத்து திருவுருக் கரந்தனள்.

தேவி திருவருள் புரிந்த வண்ணம், தன் மனையாள் வயிறு நிரம்பி நல்லோரையில் ஒரு பெண் மகவை ஈன்றெடுக்கக் கண்ட அரசன், தேவியின் திருவருளை வியந்து சாவித்திரி என அம்மகவிற்குப் பெயரிட்டனன். இச் சாவித்திரியார் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, கற்புக்கணிகலம் பொற்புக் குறைவிடம் எனக் கண்டோர் பாராட்டப் பன்னிராட்டைப் பிராயத்தளாய் இனிதிருக்கையில், மகதி என்னும் வீணையில் கல்லும் உருக நல்லிசை எழுப்பவல்ல நாரத முனிவர் அரசனது அவைக்களத்தை வந்தடைந்தனர்.

அரசன் இருக்கை விட்டெழுந்து, எதிர் சென்று வணங்கி, முகமனுரைத்து ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து தானும் ஒருபுறம் இருக்கையில், வழக்கம்போலத் தந்தையைக் காண வந்த சாவித்திரிக்கு, நல்லறம் கைகூடும் நற்காலமாதலால், முனிவரைக் காணும் பேறு கிடைத்தது. நல்லோரைக் காண்பதுவும் நன்றென்பர். இந் நல்லோரது வருகை ஒரு நன்மைக்கு ஏதுவாதல் வேண்டும். இவரைக் காணக்கிடைத்த இந்நாளே நன்னாளாகும் என நினைந்து, அன்பும் ஆர்வமும் பெருக முனிவரைக் கைகுவித்து வணங்கிப் பின்னர் தந்தையைத் தொழுது, மிக்க வணக்கத்துடன் ஒருபுறம் ஒதுங்கி நின்றனர் சாவித்திரியம்மை.

அப்பொழுது மன்னன் நாரதரை நோக்கி "பெரியீர்! என் மகள் சாவித்திரிக்கு இப்பொழுது வயது பன்னிரண்டு; தக்க கணவன் இன்னும் கிடைத்திலன்; அதுவே எனக்குப் பெருங் கவலையாயிருக்கின்றது; அதனைப் போக்கும் வகை இன்னதெனத் தெரிந்திலேன்" என்றனன்.

"அரசே! வேந்தர்க்கு ஏற்பட்ட மணமுறையை மறந்து விட்டனை. அரசர்க்குச் சுயம்வரமன்றோ உரித்தானது. அன்றியும் நீ

தெரிந்தெடுத்த ஒருவன் நின் மகள் மனதிற்கு இசையாதவனாக இருப்பின், அவ்விருவர் மணம் எவ்வண்ணம் இன்பம் பயக்கும்? ஆதலால், நீ மணமகனைத் தேடுவதை விட்டு, நின் மகள் வரிக்கும் ஒருவற்கு அவளை மணஞ் செய்விப்பதே தக்கது. அதுவே உன் மனக்கவலை தீர்க்கும் மருந்து" என்றருளினர்.

கேட்டபொழுதே கவலைக் கடலின் கரையைக்கண்ட அசுவபதி, மகள் முகம் நோக்கி, "மரபை விளக்கவந்த மணிபோல்வாய்! முனிவர் கூறியவாறு சுயம்வரம் ஏற்படுத்துவேன்; உன் மனதிற்கிசைந்த ஒருவனை நீயே வரிப்பாயாக. இதனை முன்னிட்டு உன் கருத்தைத் தெரிந்து கொள்ளுவதும் எனக்கு இன்றியமையாதது. ஆதலால் மனத்திலுள்ளதை உள்ளவாறு உணர்த்துக" எனக் கேட்டனன்.

நாணத்தால் தலை சாய்த்து நின்று தரையைக் காற் பெருவிரலால் கிளைத்திருந்த சாவித்திரியம்மை, பெரியோர்களிடத்தில் பொய் சொல்வது தகாதென அறிந்தவராதலால், நாணத்தை விட்டு, "எந்தையே! முன்னொரு நாள் பூஞ்சோலையில் தோழியோடு உரையாடியிருந்தேன். உயிர்ப்பாங்கி எல்லா நாட்டரசர்களின் இயல்டை

யும் எடுத்தியம்பினள். எடுத்துரைத்தவர்களில் சாலுவ நாட்டு மன்னன் மகன் சத்தியவான் என் மனதிற்கு இசைந்தவராக இருந்தமையின், அவரை என் மனதாரத் தேர்ந்திட்டேன்'' என்றனர்.

அதைக் கேட்ட முனிவர் கூறுவார். ''உன் மகள் தேர்ந்த சத்தியவான், தூய மனமும் பொய்யாத நாவும் கல்வியிற் சிறந்த நல்லறிவும், காமனை ஒத்த கட்டழகும் உடையவன்; ஆனால் உலகிற்கு ஒளி கொடுக்கும் மதிக்கும் களங்கம் ஒன்று இருப்பதுபோல, இவனுக்கும் ஒரு குறை உண்டு; அதாவது அற்பாயுள். எல்லாம் நிரம்பப் படைத்த நான்முகன் வாழ்நாளை மட்டும் குறையாக்கினன். அந்தோ! அவ்வாயுளும் இன்று தொட்டு ஓரே வருடந்தான் இருக்கின்றது. இதற்கு யாது செய்வது'' எனப் பரிவொடு கூறினர்.

கேட்ட வேந்தன் திடுக்கிட்டு மகள் முகம் நோக்கி, ''கண்மணியிற் பாவை ஒப்பாய்! முனிவர் வந்ததும் அப்பொழுது நீ வர நேர்ந்ததும் என்ன வியப்பு! இவர் வருகை எவ்வளவு நன்மையாக முடிந்தது பார்த்தனையா? இவர் வந்திராவிடின் உன் நிலைமை எவ்வாறு முடிந்தி

ருக்கும்? இன்னொன்று சொல்லுகிறேன் கேள், நீ தேர்ந்த சத்தியவான் தந்தை சாலுவன், தன் நாட்டைப் பகைவர் கைக்கொள்ளக் கண்ணிழந்து மனைவியோடு கானகத்தில் வசிக்கின்றான். இதனால் சத்தியவானுக்கு உண்ண உணவும் இருக்க இடமுமில்லை. என்றாலும், உன்னை மணம் செய்து தாலாமென்றால் ஆயுளும் பஞ்சையாயிருக்கின்றான். ஆயுளின் எல்லையை அறிந்த பிறகும், உன்னைக் கொடுக்க என் மனம் எப்படித் துணியும்? உலகில் வேறு மன்னர்கள் இல்லாமற் போகவில்லை. எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர். அவருள் ஒருவரைத் தேர்வாயாக" என்றனன்.

சாவித்திரியம்மை புன்னகை செய்து "தந்தையே! என்ன அறியாதவர் போலப் பேசுகின்றீர்கள்? பாங்கி சொல்லியபொழுது சத்தியவான் குணமும் செய்கையும் பிறவும் என் மனதிற்கு இசைந்திருந்தபடியால், அப்பொழுதே அவரை என் கணவராக மனத்தில் தேர்ந்தேன். இருவரைத் தேர்வது அரச கன்னியருக்கு ஏற்குமெனில், நானும் பிறரை எண்ணுவேன். மனதாரத் துணிந்து வாயாரச் சொல்லிய இவ்வுறுதியினும் மெய்யாற் பரிசிப்பது

மேலாமோ? மனம் பரிசித்த பின் பல்லவா மெய்ப்பரிசம் நிகழ்கின்றது. மனம் காதலிக்காத ஒரு பொருளை மெய் தீண்டினாலும் அதனிடத்தில் விருப்பம் உண்டாகிறதில்லை. இது யாவரும் பழக்கத்திற் கண்டதுதானே. ஆதலால், என் உள்ளத்தால் தேர்ந்திட்டவரே என் கணவராவர். அவர் இன்னும் ஒரு வருடத்தில் இறந்தாலும் சரி, அல்லது நெடுங்காலம் வாழ்ந்திருந்தாலும் சரி, அவரையன்றிப் பிறரைத் தேர்நதிடேன் இதுவே உறுதி" என்றனர்.

உலகத்தில் உள்ள மற்றைய பெண்களில் தன் மகளையும் ஒருவராக நினைந்து அரசன் வாட்டமுறக்கண்ட முனிவர், "வேந்தனே! உன் மகளைப் போலும் கற்புடையார் எவருளர்? சத்தியவான் சின்னாளுடையவன் எனினும் உன் மகளின் கற்பின்பெருமை வீண்போமா? இவளைப்போல் மனவுறுதி உடையாரை நூலினும் கண்டறியேன். அருந்ததியும் இவட்கு ஒப்பாகாள். இன்னும் சொல்லுகின்றேன் விதியை மதியால் வென்றவரும் உண்டு. உன் மகள் நோற்ற நோன்பின்பயன் அவளால் தேர்ந்திட்டவனை நெடுநாள்வாழச் செய்தலுங் கூடும்;

ஆதலால், அரசே! இனிக்கால இடையீடின்றி உன் மகளைச் சத்தியவானுக்கே மணஞ்செய்து தருக" எனக்கூறித் தம தலகடைந்தனர்.

வேந்தனும் தன் மகள் சாவித்திரியைத் தேர் மீதேற்றிச் சென்று, சாலுவன் வாழும் கானக மடைந்து, சத்தியவானுக்கு விதிப்படி மணஞ்செய்து கொடுத்து, தன் நகரம் அடைந்தான்.

தம் தந்தை சென்ற பின்பு, ஆடையணிகலம் வேண்டாது மரவுரி தரித்து, இனிய சுவை வாய்ந்த உண்டியை வெறுத்துக் காய்கனி அருந்தி அஞ்சடுக்கிய பஞ்சணையின் மீது பள்ளி கொள்ளாது கையே அணையாகத் தரையில் துயின்று, தமக்காவன செய்வதற்கு யாரையும் வேண்டாமல் கணவனுக்கான பணிவிடைகளைத் தாமே வழுவாதியற்றி, நகமும் தசையும் போலப் பிரியாது, வாழ்ந்திருக்கையில், நாரத முனிவர் கூறிய ஒரு வருடத்தில், நான்கு நாட்கள் ஒழிய ஏனைய நாட்கள் பறந்து செல்லக் கண்ட சாவித்திரி, "இனி வாளாவிருப்பது கூடாது; மங்கையர்கள் தாலிதழைப்பதற்கு நோற்பது கௌரிநோன்பு, அதனை நோற்றவர் அடையாத பேறில்லை என்பர். ஆதலால் யானும்

விரைவாக அதனையே கைக்கொள்வது தக்கது'' எனத் தமக்குள் முடிவு செய்து கொண்டு, நீராடி ஊணுறக்கம்நீத்து, ஒருமைப்பட்டதம துளத்தில் கௌரியை விடாது நினைந்து ஒரு புறம் இருந்தனர்.

இவ்வண்ணம் கடிய நோன்பு நோற்றிட, மூன்று நாள் கழிய நான்சாம் நாள் வந்தது. "இன்றைக்குத்தான் முனிவர் சொல்லிய கடைசி நாள்; என் கணவருக்கு எந்நேரத்தில் எது வருமோ அறிந்திலேன். அரைக்கணமே னும் அவரைப் பிரியாமல் பின் தொடர்ந்து செல்லுவேன்'' எனத் தீர்மானித்து, சத்திய வானை அணுகி, "நாயக! நான் இங்கு வந்து இத்தனை நாளாகியும், இக்கானகத்தைக் கண்ட றியேன்; பார்க்க வேண்டும் என்னும் விருப் பம் மிகுகின்றது; இன்று செல்லும்பொ ழுது என்னையும் அழைத்துப் போகவேண்டும்'' என வேண்டினர்.

பெண்ணே! நீ சொல்லிய வண்ணம் செய்வ தில் தடையில்லை. ஆனால் ஒன்றுரைப்பேன் கேள்; மூன்று நாளாக நீரும் பருகாமல் கண் ணும் உறங்காது கடிய நோன்பு ஆற்றினை; அத ஞல் தீயிடைப்பட்ட மலர் மாலைபோல உன்

உடம்பு வாடிப் பொலிவழிந் திருக்கின்றது; இன்று பாரணம் செய்து இளைப்பாறியிரு; நாளை அழைத்துச் செல்வேன்'' என்றனன்.

''தீபம் கண்ட பின் பாரணம் செய்வேன்; அந்நேரமளவும் தனித்திருப்பேனாயின், பகலும் நீட்டிக்கும், துயிலும் வரும்; பாசனை தினத்தில் பகற்பொழுதில் உறங்கினவர் பலரைக் கொன்ற பழியடைவர் என்பார்கள். உடன்வருவேனாயின், இத்தகைய பழிபாவங்கட்கு ஆளாகேன்; என் எண்ணமும் நிறைவேறும். ஆதலால், என் சொல்லை மறுத்திடாது அழைத்துப் போக வேண்டும்,' என மீளவும் இரந்தனர்.''

''அன்னம்போலும் மென்னடையாய்! நின் எண்ணம் இதுவாயின் என்னுடன் வருக'' என்றுரைக்க சாவித்திரியும் உடன் போவாராயினர்.

அங்கு, பளிங்கைக் கரைத்து வார்த்ததுபோலத்தெளிந்த நீரையுடைய சிற்றருவிகள் இடையறாதுபாய, கம்பலம் பரப்பினாற்போல எங்கும் பசுட்புற்செறிய, மண் மகள் கொண்ட புன்னகையென்ன முல்லைபரும்ப, மாயவன் உருவம் போற் காயாமலர, கொன்றை பொன் சொரிய, நீர்த்திரைகள் முழவென முழங்க, வண்டுகள் யாழ்முரல, கிள்ளையும் நாகணமும் தெள்ளிசை

பாட, மயிலாடக் குயில் கூவ, இன்னிளந் தென்றல் நன்மணம் வீச, வானகம் மீன்கணத்தொடு வந்திருந்ததுபோல, மலர்க்கொத்தும் பழக் குலையும் இடையிடை தூங்கத் தழைத்துச் செழித்து, கதிரவன் கரமுந் தீண்டற் கரியதாய்க் குளிர்ந்து, கண்டவர் மனத்தையும், கண்ணையும் சிறைப்படுத்தும் தண்டலை நடுவே களிற்றின் பின்செல்லும் இளம் பிடிபோலச் சத்தியவானொடு செல்லும் சாவித்திரியம்மை, கருமமே கண்ணாயினாராதலால் சோலையின் வனப்பையும் நோக்கிலர்; பறவைகளின் பாட்டிசையும் கேட்க விரும்பிலர்; பழுத்துக் கனிந்து கைக்கெட்டத் தூங்கும் பழங்களையும் பறித்துச் சுவைத்திலர்; இன்சுவை வாய்ந்த தண்ணீரைக் கைகளால் முகந்து முகந்து குடித்திலர்; மலர்களைக் கொய்து மணங்காணவும் தலையிற் சூடவும் நினைந்திலர்; அரிமா, வரிமா, கைமா முதலிய கொடிய விலங்குகளின் இடி போன்ற முழக்கத்திற்கும் அஞ்சிலர்; ஐம்புலன்களையும் வென்ற பெரியரைப்போல ஒன்றினும் பற்றின்றி எப்பொழுது எது நேருமோ என்னும் கவலையோடு கண்ணும் கருத்தும் கணவனிடம் வைத்துக் கணமேனும் அவனை விட்டகலாமல் நிழல்போலத் தொடர்வாராயினர்.

இவ்வாறுகச் செல்லும்பொழுது தருப்பை கவர்ந்தும், சமிதை ஒடித்தும், காய்கனி பறித்தும், மலர் கொய்தும் வண்டுபோல எங்கும் சுற்றித்திரிந்த சத்தியவான் ஒரு பெரிய ஆல நிழலை அடைந்த உடனே சாவித்திரியை நோக்கி, "பெண்ணே என் கண்கள் சுழல்கின்றன. மனம் பதைபதைக்கின்றது. கைகால்கள் சோர்வடைகின்றன. பேசுதற்கு நாவெழுந்திலது. என் செய்வேன், என்று சொல்லிக்கொண்டே அவரது மடிமிசைத் தன்தலையை வைத்துத் தரையிற் படுத்தனன்.

சிறிது நேரத்திற்கெல்லாம், கண்கள் பஞ்சடைய, பற்கிட்டிக் கைகால்கள் அசைவொழிந்தன. மூச்சும் நின்றுவிட்டது. நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பவர் போலக் கணவன் செய்கையைக் கவலையோடு நாடியிருந்த சாவித்திரியம்மை மனம் துடிதுடித்து "தேவி! என் செய்குவேன்! யாருமற்ற பாவியாகிய எனக்கு உன்னை யன்றித் துணையாவார் ஒருவருமில்லை. எல்லாச் சீவர்களையும் பெற்றுக் காக்கும் அன்னையே! உன்னைப்போல் யானும் ஒரு பெண்ணன்றோ? என் மீது நீயே கருணை செய்யாவிடின் வேறு யாரோ செய்திடுவார்? உன் நோன்பு நோற்றவர்க்குத் தாலி வளரும்

என்பரோ' அதுவும் என் பால் பொய்யாய்முடிந்ததே; எவரும் கொண்டாடும் உன் நோன்பின் பெருமையும் என்னால் பொய்படுதல்நலமாமோ? அருட்பெருங்கடலே! உன் பற்றொழிய எனக்கு ஒரு பற்றுமில்லை; அஞ்சேல் என்பவர் யாருமில்லை. நீயே தஞ்சம்; என் கணவன் உயிரை மீட்பது நின்பரம்" எனக் கண்ணீர் வார மெய்ம்மயிர்சிலிர்ப்ப, கௌரியை மனம் உருகி வாழ்த்தும்பொழுது, மார்பில் பொன்னரி மாலை துலங்க கைகளில் தண்டமும் பாசமும் தாங்கி கருத்துப் பருத்த மேனியொடு தென்றிசைக் கோமானாகிய யமன் போந்து தம் கணவனதுயிரைக் கைப்பற்றிச் செல்வது இவர் கண்ணுக்குப் புலனாயிற்று. அந்தோ! தன்னந்தனியே நின்ற பொன்னம்பாவைபோன்ற இவர் யாது செய்வார்? வெயிலிடைப்பட்ட புழுப்போல் துடித்தனர்; கண்கள் முத்துதிர்த்தன; யாருமற்ற கானகத்தில் தனியே இருந்த இவரது நிலைமையை அம்பிகையையன்றி எவர்தாம் அறிய வல்லார்? ஆயினும் தம் மனதைச் சிறிது உறுதிப்படுத்திக்கொண்டு, மடியிலிருந்த சத்தியவானுடைய தலையைத் தரையில் வைத்துவிட்டு, எழுந்து எமனைக் கைகுவித்து வணங்கி "ஐயனே! நீர் யார்? என்கணவன்

உயிரை நீர் கொண்டு செல்வதற்குக் காரணம் என்ன ?'' என வினவினார்.

என்ன வியப்பு ? இதுவரையும் என்னை எவரும் கண்டறியார்; இவ்வாறு கேட்டவரும் இல்லை ; இந்நங்கையின் கலங்காத நிலைமையை என் சொல்வேன் ? எனப் புகழ்ந்து, மலர்ந்த முகமும் குளிர்ந்த பார்வையுமாக எதிர்வந்து, ''கற்புக்கணிகலமே ! கேட்பாயாக : யான் யம தருமன் ; கால முடிந்தவர் உயிரைக் கவர்ந்து செல்வது என் தொழில் ; அதனால் என்னைக் காலன் என உலகம் கூறும் ; உடம்பினின்றும் உயிரை வேறு படுத்துவதால் என்னைக் கூற்றுவன் என்பார்கள். உன் கணவனது வாழ்நாள் இன்றோடு முடிந்து விட்டது. இவன் நற்குண நற்செய்கையனதலால், என் தூது வரை அனுப்பாமல் யானே வந்து உயிர் கொடு போகின்றேன் ; பிறந்தவர், இறப்பர் என்பதை நீ அறியாதவளல்லவே ? எவரும் மனத்தாலும் நாடற்கரிய என்னைக் கண்ணுற் கண்டனை என்றால், உனது கற்பின் பெருமையை எவராற் சொல்லமுடியும் ? இனி யான் போகின்றேன். நீ மீண்டு செல்க''? எனப் புகன்றனன்.

அண்ணலே ! ''நீர் உரைத்தவை யாவும் உண்மையே; யானோ என்றால் கணவனை விட்டுக்

கணப்பொழுதும் பிரிந்தறியாதவள்; உமக்குச் சொல்வது இன்னதெனத் தெரிந்திலேன்; எவ்வாறாயினும் என்னையும் உடன் வருமாறு அருள் புரிய வேண்டும்'' எனத் தொழுதனர்.

''கணவனோடு என்னுலகிற்கு உடம்போடணைந்த காரிகை யாருமில்லை என்றால் நீ கூட வருவதாகக் கூறுவது தகுமா? ஆதலால் உன் கணவன் உயிரை யன்றி வேறு எதனைக் கேட்பினும் தருவேன்? என்றனன்.

''அறக்கடவுளே! நீர் கூறுவது உண்மையாயின், கட்புலனின்றி வருந்தும் என்மாமன் சாலுவ நாட்டரசற்குக் கண்தெரிய வரம் அருள வேண்டும்'' எனச் சொல்ல, அவனும் அவ்வாறே வழங்கினோம் எனக் கூறி அப்பாற் சென்றனன்.

''மாதுலன் கண் பெற்றதனால் நமக்கு வந்த நலன் யாது? நாயகனை யன்றி நங்கைமார் பெறும் பேறுமுண்டோ? எவைகளைப் பெற்றாலும், கணவர் இல்லையாயின், காரிகையார்க்கு அவற்றால் என்ன பயன்?'' என்று நினைந்து, முன்போற் பின்தொடர, ''அனிச்சமலரும் அன்னத்தின் தூவியும் மாதரடிக்கு நெருஞ்சிப் பழம் என்பார்கள்; இதுவோ என்றால், நினைத்த

வர் உளத்தையும் மிதித்தவர் அடியையும் சுடும் கொடுஞ்சுரம்; இதிற் கிடப்பன முள்ளும் கல்லும்; இனி வருவையாயின், நின்கால்கள் கன்றும் அன்றியும் கொப்புளங் கொள்ளும்; ஆகலால், நின் வருகையைத் தவிர்க" என்றுரைத்தனன் கதிரவன் மைந்தன்.

"தரும தேவே! நாயகனை இழந்த நங்கையர் நடைப் பிணத்தோடொப்பர் என்றால், நங்கைமார்க்கு உயிர் தம் நாயகனையன்றி வேறுண்டோ? என் நாயகன் உயிரை நீர் கவர்ந்து செல்ல விடுத்திட்டு நான்வறிதே மீளுதல் அடுக்குமா? உயிர் நீத்த பிணம் உலகிலிருந்து என்ன பயன்? ஆதலால், என் கணவன் சென்ற உலகில் யானும் சேர்வ தன்றித் திரும்பிச் சென்றிடேன் என்றனள்.

"மாதரசே! உலகினுக்கு அடாத தொன்றை மீளவும் கூறுதல் அழகோ? நின் காதலன் உயிரை மட்டும் கேளற்க, வேறு எதனை வேண்டினும் தருவேன் விரும்பியதனைப் பெற்றுத் திரும்பிச் செல்லுக என்றுரைக்க, "கோதிலாய்! என் மாமன் கண்மட்டும் பெற்றால் ஆவதென்ன? இழந்த நாட்டினையும் அவர் மீளவும் பெற வரம் தருக" எனக் கேட்க "அவ்வரம் அளித்தேன்,

நீ மீண்டு செல்க" எனக்கூறித் தென்றிசை நோக்கினன் கூற்றுவன்.

"மாதுலன் கண்பெற்றுநாடு பெற்றுல்நம் காதலன் உயிர் பெற்றதாமோ? கண்ணிழந்த ஒருவன் தான் அதனைப் பெற முயலாமல், கண் கெட்ட பிறனுக்கு அக்கண்ணை அளிக்கவேண் டிக் கடவுளை நோக்கித் தான் வரங்கிடைந்த தொக்கும என் செய்கை; இத்தகைய அறியா மைக்கு யாது செய்வேன்? எனக் கலங்கிப் பின்னும் முன்போற் றொடர்ந்தனர் சாவித் திரியம்மை

கண்டனன் தென்றிசை நாயகன்; "அம்மே! என்னே நின் பிடிவாதம், இருந்தவாறு? பேறு, இளமை, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்ற இவ்வாறும் எவர்க்கும் கருவில் அமைந்தன வன்றோ? இவற்றை மாற்றுவதற்கு யாரால் முடியும்? உன் காதலனுக்கு அன்று அமைத் திட்ட காலம் இன்றொடு முடிந்தது. கழிந்த தற்கு இரங்குவதிற் பயனில்லை. ஆதலின், நீ என்னைத் தொடர்வது நீதியுமாகாது, மற்றும் அறமும் அன்று. நின் நகர்க்கு நீ மீண்டு செல்வகே கக்கது என்றுரைத்து வாய்மூடு முன் தேமொழி கூறுவார்; "நான்முகன்

படைக்கத் திருமால் காக்கும் பல்லுயிர்த் தொகையையும் அழிக்கின்றவன் நீ என்றால், உன்னினும் ஆற்றல் அமைந்தவர் தேவரில் யாவருளார்? நின் ஆற்றலும் பெருமையும் நினக்குத் தெரிந்தில போலும்; நின் அருள் பெற்றவரைக் காலமும் கணக்கும் என் செய்யும்? பலவும் பேசி என்? மாசிலாய்! என் துணைவனொடு என்னையும் கொண்டு சென்று என் துயரம் நீக்கியருள்" என்று கைகுவித்த தண்ட நாயகன், "அன்னே! என்ன சொல்லியும் பின் தொடர்வதை விட்டிலாய்; உன் காதலன் உயிரைத் தருதற்கு எனக்குரிமை இல்லை; அதனை விடுத்து வேறு எதனை வேண்டினும் தருகுவேன், கேள்" என, "எந்தாய்! எனது தந்தை, மைந்தர் இல்லாமையால் நொந்திருக்கின்றனர்; அவர்க்கு ஆற்றலமைந்த மைந்தர்கள் நூற்றுவரைத் தந்தருள்" என்று கேட்க, "அன்னவாறே அளித்தோம்" எனக் கூறித் தன்னுருக் கரந்தேகினன் காலன்.

அவ்வாறு அவன் செல்வதனைக் கற்பின் திறத்தால் உயர்த்துணர்ந்த நங்கையார் எத்தகைய துன்பமும் நோக்காது, தம் கணவனது உயிரைப் பெறுதல் ஒன்றுமே காரணமாக மற

லியைப் பின் தொடர்ந்து செல்ல அவனும், இவளது கற்பின் மேன்மையையும் கருத்தின் உறுதியையும் கண்டு வியந்து, முன்போலத் தன் உருக்காணத் தோன்றி மங்கையர்க்கு நாயகமே ! இந்த அசிபத்திர வனத்தில் பேயும் பூதமும் நடமாடுமே யொழிய மக்கள் எவரும் நடந்திடார் என வழியியல் புரைத்தும் நீ கேட்டவைகளை மறுமற் கொடுத்தும் நீ மீண்டிலை; இது நன்றல்லவே" என்றன்.

"புண்ணிய சீலர்களைக் கண்ணிற் கண்டால், துன்பம் நீங்கி இன்பம் எய்திடும் என்பர்கள். அம்மொழி பொய்ம்மொழியாதல் நன்றோ? அறக்கடவுளாகிய நின்னைக் கண்டு சரணடைந்த நான், குறையோடு செல்வது அறமாமோ? உயிரிழந்த உடலுக்கு ஆடை அணிகலங்களைத் தந்ததுபோல் எனக்குப் பயன்படாத வரங்களை அளித்திட்டனை; ஆளனையன்றி அரிவையர்க்கு ஆவனவும் உண்டெனிற் சொல்லுக; என்னுயிர் நாயகனை விடுத்திட்டு நான் வறிதாகத் திரும்பிடேன்; அவர் செல்லும் நல்லுலகிற்கு நானும் வருகின்றேன்; தடுப்பது தகாது" என, மனம் கைந்துருகி நிற்பக்கண்டு, தானும் உள்ளம் குழைந்து, "கற்பிற் சிறந்த இந்நற்பாவை

இத்தகைய ஆற்றல் பெற்றதற்குக் காரணம் ஒன்றிருத்தல் வேண்டும்; காரணமின்றிக் காரியம் நிகழாது" எனத் தன்னுளத்தில் நுனித்து நாடினான்.

நாடியபோது, "காலி தழைக்கத் தையலார் நோற்பது கௌரிநோன்பு; அதனை விதிப்படி நோற்றுத் தேவியின் அருள் நோக்கம் பெற்றவர் இவ்வம்மை; நம்மைக் காண்பதற்கும், இக்கொடுஞ் சுரத்தில் இவ்வளவு நெடுந்தூரம் பின் தொடர்தற்கு இவர்க்குத் துணையாயிருந்ததும் அதுவே; இவரது கணவன் அற்பாயுள் உடையவனெனினும், இவர் நோற்ற தன் பயனால், நிறைந்த வாழ்நாள் உடையவனாயினன்" என்பதை உய்த்துணர்ந்தான். "ஆ! ஆ! இதனை முன்னமே ஆராயாமல் கெட்டேன்; தேவியின் சீற்றத்திற் காளாகாமல் சத்தியவான் உயிரைச் சிறிதும் இடையீடின்றி விடுத்திட்டு நோன்பின் பெருமையைப் பாதுகாப்பேன்" எனத்தனக்குள் முடிவுசெய்துகொண்டு, தாயே! நீ மேற்கொண்ட கௌரி நோன்பு நின் தாலியைத் தழைப்பித்தது; நின் கணவனும் உயிர் பெற்றான். நீ விரும்பிய வண்ணம் நின் கணவனது உயிரை விடுத்திட யானும் கடமைப்

பட்டவனாயினேன் ; உன் கணவன் உயிரை இப்பொழுதே தந்தேன் தந்தேன் ; நீயும் அவனோடிருந்து இல்லறம் நடாத்தி மக்களைப்பெற்று இன்புற்று வாழ்வாய்" என வாழ்த்தித் தன் உலகடைந்தனன் தருமன்.

தென்றிசைக் கடவுள் தம்முலகடைந்தபின்னர், சாவித்திரியம்மை, நாயும் நரியும் பேயும் கழுகும் திரியும் கானகத்தில் நம்முயிர் நாயகனது உடலைத் தனியே வைத்து வந்தேம் ; யாதாயிற்றோ ? என்னும் கவலை மிக்குடையவராய், காற்றினும் கடிதாக நடந்து கணவனது உடல் கிடந்த இடத்தை அடைந்து, தீங்கு சிறிதுமின்றி இருப்பக் கண்டு மனந்தேறி, அவன் தலையை எடுத்துத் தம் மடியின் மீது வைத்த சிறிது நேரத்திற்கெல்லாம் உயிர் வந்து அவன் உடலிற் புகவே, நாசி உயிர்த்தது ; காற்பெருவிரல்கள் துடித்தன ; முகம் விளக்க முற்றது ; ஆகம் துவண்டது ; கைகள் அசைந்தன ; கண்கள் விழித்தன ; சத்தியவானும் துயிலுணர்ந்தவனைப் போல எழுந்தான்.

கார்வரக் கண்ட தோகையைப் போலக் களிப்பெய்திய சாவித்திரியம்மை, தம் கணவ

ளோடு சென்று, தாம் பெற்ற வரத்தால் கண் பெற்று நாடெய்திய மாமன் மாமியுடன் சாலுவ நாட்டினை அடைந்து இனிது வாழ்ந்திருந்தனர்.

கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்த மரபும் பெருந்தவக்
கற்பி னுட்கொண்ட காதல னருயிர்ச்
சுற்றம் யாவுந் துறக்கத்தி னெய்துமால்.

முற்றிற்று.

இராஸ் அண்டு கோ. மேட்டுத் தெரு, தஞ்சாவூர்.